1978 மார்ச் 11]

பூவிருந்தவல்லி நெடுஞ்சாலையினை அகலப்படுத்தல்.

*523 வினு—திரு. எஸ். ஜே. இராமசாமி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இந்த ஆண்டில், சென்னை நகரில், பூவிருந்தவல்லி நெடுஞ்சாலை அபிவிருத்தி செய்யும் திட்டத்தின்கீழ், பாதையினை அகலப்படுத்துவதற்கென, காம்பவுண்டு சுவர்கள் உள்ள இடங்கள் அரசாங்கத்தால் விலைக்கு வாங்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், என்ன விலை கொடுத்து வாங்கப்பட்டது ?

(இ) பாதை அகலப்படுத்தும் திட்டத்திற்கான மதிப்பீட்டுச் செலவு எவ்வளவு ?

மாண்புமிகு திரு சி. பொன்னையன் : (அ) ஆம்.

(ஆ) ஒரு கிரவுண்ட் ரூ. 9,500 என வருவாய்த்துறையால் விலை நிர்ணயிக்கப்பட்டு அதற்கான முதல் கட்டத்தில் ரூ. 4.20 இலட்சமும், இரண்டாவது கட்டத்தில் ரூ. 5.90 இலட்சமும் மாவட்ட ஆட்சியாளர் வசம் நெடுஞ்சாலைத் துறையால் செலுத்தப்பட்டுள்ளது.

(இ) பாதை அகலப்படுத்துவதற்கான மொத்த செலவு நிலம் கையகப்படுத்தும் திட்டத்திற்கு ரூ. 10.15 இலட்சமும், பூவிருந்த வல்லி நெடுஞ்சாலையை தினத்தந்தி அலுவலகத்திலிருந்து ஆவடி சாலை வரை அகலப்படுத்தி மேம்பாடு செய்ய ரூ. 21.00 இலட்சமும் ஆகும்.

திரு. மு. அரங்கநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சி எல்லையிலுள்ள பூந்தமல்லி நெடுஞ்சாலை—அண்ணா சாலை—திருவொற்றியூர் நெடுஞ்சாலை—இதுபோன்ற சாலைகளை தேசிய நெடுஞ்சாலைத் துறையிடம் மாற்றியிருப்பதால், சென்னை மாநகராட்சி நிர்வாகத்துக்கும், தேசிய நெடுஞ்சாலைத் துறை நிர்வாகத்துக்கும் இடையே அடிக்கடி தகராறுகள் ஏற்படுகின்றன. ஆகவே, மீண்டும் மாநகராட்சியின் பொறுப்பிலேயே இந்த மேற்கண்ட சாலைகளை ஒப்படைக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாநகராட்சி நிர்வாகத்துக்கும், நெடுஞ்சாலைத் துறை நிர்வாகத்துக்கும் இடையே தகராறு என்பதே இல்லை. மாநகராட்சியிடமிருந்து இந்த சாலைகள் நெடுஞ்சாலைத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டது, நெடுஞ்சாலைகள் எல்லாம் செம்மையான முறையில் போடப்பட்டு விபத்துக்கள் நிகழாதவண்ணம் இருக்க வேண்டும் என்றும், நீண்டநாள் இருக்க வேண்டும் என்ற எண்ணத்திலும் செம்மையான முறையில் செயல்படுவதற்காகத்தான் நெடுஞ்சாலைத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனை ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மு. அரங்கநாதன் : மாநகராட்சி நிர்வாகத்துக்கு உட்பட்ட மின் தொடர்புகள்—அதாவது காலையில் கரண்ட் கட் செய்யப்படுகிறது; அப்படிப்பட்ட நேரத்தில், மாநகராட்சி நிர்வாகத்தினர் மின்சார சம்பந்தமான வேலைகளைப் பார்த்துக் கொண்டிருக்கும் நேரத்தில், ஏற்படுகின்ற பல்வேறு தொல்லைகளின் காரணமாக—ஒருவருக்கொருவர் தகராறு ஏற்பட்டு, மாநகராட்சிக்குச் சொந்தமான மெட்டீரியல்களை எல்லாம் நெடுஞ்சாலைத் துறையினர் சீஸ் பண்ணிக்கொண்டு, எடுத்துக் கொண்டு போய் விடுகிறார்கள். இப்படி தகராறுகள் ஏற்படுவதினால், ஒரே நிர்வாகத்தின் கீழ் இந்தச் சாலைகள் மாற்றப்படுமா என்று கேட்டேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : நிரந்தர பலனைப் பெற முயலும்போது, ஆரம்பத்தில் ஏற்படுகின்ற சில சிக்கல்களை பொறுத்துக் கொள்ளத்தான் வேண்டும்.

கால்நடை உதவியாளர்கள்.

*524 வினா—திரு. தாழை மு. கருணாநிதி, திரு. வி. கே. கோதண்டராமன்: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெருக்கடி நிலை அமுலில் உள்ள நோக்கில், கால்நடை பாராமரிப்புத் துறையில் 264 கால்நடை உதவியாளர் நிலை II களுக்கு, கால்நடை உதவியாளர் நிலை I பதவி உயர்வு அளிக்கப்பட்டு, ரத்து செய்யப்பட்டது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், மீண்டும் பதவி உயர்வு எப்போது அளிக்கப்படும் ?

TRUTH ALONE TRIUMPHS